சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பு.த.சா.1 விஸ்வநாதன் த/பெ. கோவிந்தசாமி வயது.47

**<u>சாட்சி ஆஜர். குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

எதிரியின் கணவர் மேகநாதன் பீட்டர் என்பவர் 26.08.2020 ல் எனக்கு அறிவிப்பு ஒன்று கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட அறிவிப்பிற்கு நான் 15.09.2020 ல் பதில் அறிவிப்பு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட அறிவிப்பு கொடுக்கப்பட்ட பிறகு எதிரியின் கணவருக்கும், எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட அறிவிப்பில் நான் எதிரியை மிரட்டி, அறுவறுக்கதக்க வார்த்தைகளால் திட்டி 3 காசோலைகளை அவரிடமிருந்து திருடி சென்றதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான், அதை நான் மறுத்துள்ளேன். 2020 ம் வருடத்திலிருந்தே எனக்கும், எதிரிக்கும் தகறாறு இருக்கும் பட்சத்தில் நான் அவருக்கு பணம் கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 15.09.2020 ல் கொடுத்த பதில் அறிவிப்பில் எ.ம.சா.ஆ.6 ல் 2019 ம் ஆண்டு வேவ்வேறு தேதிகளில் ரூபாய் 32 லட்சம் கடன் பெற்று அதற்கு காசோலை மற்றும் புரோநோட் ஆகிய ஆவணங்களை கடன் வாங்கிய தேதியிலேயே கையொப்பமிட்டு கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட அறிவிப்பில் காசோலையின் விவரமும், புரோநோட்டு எழுதிக்கொடுத்த தேதியும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் இவ்வழக்கிற்கு கொடுத்த அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 15.09.2020 பதில் அறிவிப்பில் சொல்லியுள்ள காசோலை வைத்து நான் எந்த வழக்கும் தொடரவில்லை என்றால் சரிதான். பிப்ரவரி 2021 ம் வருடம் முதல் வாரத்தில் நான் பணம் கொடுத்தபோது வழக்கு காசோலையை எதிரி கொடுத்தார். 2020 ம் வருடத்திலிருந்து எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்ததால், 2021ம் வருடம் நான் பணம் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னுடைய நண்பரின் மனைவி ஆவார். அவர் எனக்கு தூரத்து சொந்தமும் ஆவார். அவர் கிருத்துவ மதத்திற்கு மாறிய பிறகு எங்களுக்குள் இருந்த உறவு முறை முடியுற்றது. எதிரிக்கு எந்த பணமும்

கொடுக்கவில்லை என்றும், கிருத்துவ மத போதகர் ஒருவரிடம் வட்டிக்காக பணம் கொடுத்துவிட்டு எதிரியையும், எதிரியின் கணவரையும் பழி வாங்குகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பாரத ஸ்டேட் வங்கி, சுந்தரம்பள்ளி கிளையில் உள்ள கணக்கின் மூலம் மாதம் மாதம் மேற்கண்ட பணத்திற்கு வட்டி பெற்று வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 07.07.2020 ல் நான் எதிரியிடம் காசோலை திருடி சென்றதற்கு கந்திலி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல, விசாத்து சம்பவம் நடக்கததால் புகாரை முடித்து வைத்துவிட்டார்கள். எதிரி எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றும், அதில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட மத போதகர் செந்தில் லிவிங்ஸ்டன் என்பவரை இவ்வழக்கில் எதிரி தரப்பு சாட்சியாக விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் எதிரி, எதிரியின் கணவர் மற்றும் அவரது தாயார் ஆகியோர்களை தாக்கியதாக கந்திலி காவல் நிலையத்தில் என் பெயரிலும், என் மனைவி மற்றும் பிள்ளைகள் பெரியிலும் குற்ற எண் 170/2022 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை தான் மேற்கண்ட வழக்கிற்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். **மேற்கண்ட முதல் தகவல் அறிக்கையானது எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் சொல்லும் தேதியில் எந்த பணம் பரிவர்தனையும் எனக்கும், எதிரிக்கும் இல்லை என்றும், எதிரி எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றும், அவரை மிரட்டி பணம் பறிப்பதற்காக இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தொடர்வதற்கு முன்பே கொடுத்த அறிவிப்பில் அனைத்து விவரங்களும் எதிரி தரப்பில் தெரிவித்து இருந்தபோதும், நான் இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Signature of witness.